DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,

DEVAKOTTAI

CC.No.153/2023

Deposition of witness for Prosecution அ.சா.2

பெயர்	:	பௌசியா பானு
தகப்பனார்/கணவர் பெயர்	:	முகமது கனி
கிராமம்	:	
தாலுகா	:	
தொழில்	:	
வயது	:	

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 13.02.2026

எதிரி ஆஜர் இல்லை. அவரைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் தற்போது தேவகோட்டையில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனக்கு பெரியம்மா. என் அப்பாவிற்கு சாமி கும்பிடுவதற்காக கடந்த 12.03.2023 ம் தேதி என் அம்மா தேவகோட்டைக்கு காலையில் வந்து விட்டார். என் அண்ணன் மதியம் இளையான்குடியிலிருந்து வந்தார், வரும்போது வழியில் மதியம் 3 மணியளவில் ஒத்தக்கடை அருகே வரும்போது இங்கிருந்து போன டாடா ஏஸ் வாகனம் என் அண்ணன் மீது அடித்துவிட்டது. பின்பு விபத்து ஏற்படுத்திய டாடா ஏஸ் வாகனத்தில் இருந்தவர்கள் என் அண்ணனை அரசு மருத்துவமனையில் சேர்த்துவிட்டு எனக்கு போன் செய்தார்கள். நான் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். என்

அண்ணனுக்கு கழுத்துக்குப்பின்னாடி காதுக்கு அருகே ரத்தக்காயமாக இருந்தது, கால் மடங்கி தெரித்து இருந்தது. பின்பு தேவகோட்டையிலிருந்து மானகிரி அப்பலோ மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம், அங்கு இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

சம்பவம் நடந்த சயமத்தில் நான் தேவகோட்டையில் வீட்டில் இருந்தேன். நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன். போன் மூலமாக எனக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் அரசு மருத்துவமனையில் இருந்து தகவல் சொன்னார்கள். என் அண்ணன் ஓட்டி வந்த வாகனம் அதிவேகமாக செல்லக்கூடிய விலை அதிகம் உள்ள வாகனம் என்றால் சரிதான். என் அண்ணன் பைக்கில் வரும்போது ஹெட்போன் மாட்டிக்கொண்டு தலைக்கவசம் அணியாமல் வந்த விபரம் தெரியுமா என்றால், இல்லை. எனக்கு அரசு மருத்துவமனையில் இருந்து எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது என்றால் மாலை 4 மணியளவில் இருக்கும். நான் எவ்வளவு நேரத்தில் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் ஒரு 10 நிமிடத்தில் சென்றுவிட்டேன். விபத்து ஏற்படுத்தியவர் எந்த திசையில் இருந்து வந்தார் என்றும் என் அண்ணன் எந்த திசையில் இருந்து வந்தார் என்று தெரியுமா என்றால் என் அண்ணன் இளையான்குடியில் இருந்து வந்தார், விபத்து ஏற்படுத்திய வாகனம் தேவகோட்டையில் இருந்து வந்தது, எனக்கு திசை சரியாக தெரியாது. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கில் இறந்துபோனவர் என் அண்ணன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை

எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். என்னை விசாரிக்கும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் நானும் அ.சா.1ம் இருந்தோம். நாங்கள் புகார் எதுவும் எழுதி கொடுத்தோமா என்றால் நாங்கள் சொல்ல சொல்ல ஒரு போலீஸ்காரர் எழுதிக்கொடுத்தார். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். புகாரில் நான் கையெழுத்து போட்டேனா என்றால் ஆமாம், புகாரை நான் படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன். அதில் என்ன எழுதியுள்ளது என்ற விபரங்களை சொல்ல முடியுமா என்றால் முடியும். புகாரில் யார் யார் நேரில் பார்த்தார்கள் என்பதை சொல்லியுள்ளேனா என்றால் அம்சத்ராணி நேரில் பார்த்துள்ளதாக சொல்லியுள்ளேன். எதிரி வாகனத்தை சாலையின் -ஓரமாக நிறுத்திவிட்டு சென்றிருந்தார் என்றும் அதில் என் அண்ணன் வாகனத்தில் வந்து மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. அ.சா.1 விபத்து காப்பீடு பெறுவதற்காக பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,

DEVAKOTTAI

CC.No.153/2023

Deposition of witness for Prosecution அ.சா.3

பெயர்	சாமிநாதன்
தகப்பனார்/கணவர் பெயர்	கருப்பையா
கிராமம்	
தாலுகா	
தொழில்	
வயது	

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 13.02.2026

எதிரி ஆஜர் இல்லை. அவரைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் காரைக்குடியில் வசித்து கம்பெனி நடத்தி வருகிறேன். கடந்த 12.03.2023 ம் தேதி மதியம் 3.30 மணியளவில் டாடா ஏஸ் வண்டி பாலத்திற்கு அந்தப்பக்கம் இருந்து தேவகோட்டை நோக்கி வந்தது. FZ பைக்கும் அந்த பக்கத்திலிருந்து தேவகோட்டை நோக்கி வந்தது. எங்களுடைய கம்பெனியான மாடர்ன் விவசாயி தீவனக்கடை பாலத்தை விட்டு கீழே இறங்கி இருக்கும். விபத்து நடக்கும் சத்தம் கேட்டது நாங்கள் போய் பார்த்தோம். FZ பைக்கில் வந்தவர் கீழே விழுந்துகிடந்தார். ஆம்புலன்க்கு போன் செய்தும் வர தாமதம் ஆனது காதில் அவருக்கு ரத்தம் அதிகமாக வந்து கொண்டிருந்தது. அவர் மோதிய டாடா ஏசிலேயே அவரை ஏற்றி மருத்துவமனைக்கு

அனுப்பி வைத்தோம். போலீசார் இது சம்பந்தமாக என்னிடம் விசாரித்தார்களா என்று எனக்கு ஞாபகமில்லை.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

விபத்து நடந்த அன்று நான் எங்கிருந்தேன் என்றால் தேவகோட்டை கம்பெனியில் இருந்தேன். மெயின் ரோட்டிற்கும் என் கம்பெனிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 100 மீட்டர் இருக்கும். எங்கள் கம்பெனி பாலத்திற்கு அடியில் உள்ளது. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும் சத்தம் கேட்டுதான் போய் பார்த்தேன் என்றால் சரிதான். ஆம்புலன்சிற்கு நான் போன் அடிக்கவில்லை. யார் போன் அடித்தார்கள் என்று தெரியாது. விபத்தில் இறந்தவர் ஹெட்போன் அணிந்து கொண்டு தலைக்கவசம் அணியாமல் இருந்தார் என்றால் சரிதான். விபத்தில் இறந்தவர் மது அருந்திவிட்டு வந்திருந்தார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. இரண்டு வாகனங்களும் ஒரே திசையில் வந்ததால் எந்த வாகனம் எந்த வாகனத்தில் மோதியது என்று தெரியாது என்றால் சரிதான். நான் போய் பார்த்தபோது டாடா ஏஸ் வாகனம் சாலையின் இடது ஓரத்தில்தான் நின்று கொண்டிருந்தது என்றால் இல்லை, சாலையின் இடது ஓரத்தில் இல்லாமல் அதே சமயம் வலதுபக்கம் தவறாக திசையில் ஏறி வராமலும் அதற்குரிய பாதையில் நின்று இருந்தது. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை:

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons),,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.